**தம்பலகமம் பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள் -

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தம்பலகமம் பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வரவு செலவுக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தம்பலகமம் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்

கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் பிரகாரம் முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய வட்டி ரூபா 4,573,444 நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,393,444 தொகையாக காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான செலவீனம் ரூபா 180,000 தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | தற்போது சீர்செய்யப்பட்டு சரியான தொகை உரிய பதிவேடுகளில் பதியப்பட்டுள்ளது | உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய வட்டி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேணடும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| கூட்டுப் பெறுமதி ரூபா 5,958,896 தொகையான 03 கணக்கு விடயங்களிற்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2024ம் ஆண்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | ஆவணங்கள் பெற உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 1.7 இணக்கமின்மைகள் -

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் -

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| 2021 ஆகஸ்ட் 16 ஆந் திகதியும் PT/03/2021 ஆம் இலக்கமும் கொண்ட கிழக்கு மாகாண நிதிச் சுற்றறிக்கை | பாதுகாப்புப் பணம் அறவீடு செய்யப்பட வேண்டிய 08 உத்தியோகத்தர்களிடமிருந்து பாதுகாப்பு வைப்புப்பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | பிணைப்பணப் பெறுகை தொடர்பாக தற்போது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 6,998,328 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 2,317,203 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர்31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர்31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 300,000 | - | - | - | - | - | - | - |
| (ii) வாடகை | 9,623,000 | 6,203,000 | 5,994,000 | 209,000 | 13,150,000 | 5,804,000 | 5,450,000 | 4,028,000 |
| (iii) உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 1,274,000 | 1,273,000 | 1,273,000 | - | 1,200,000 | 855,000 | 710,000 | 145,000 |
| (iv) ஏனைய வருமானம் | 715,000 | - | 623,000 | - | 1,722,000 | 995,000 | 995,000 | - |
| கூட்டுத் தொகை | 11,912,000 | 7,476,000 | 7,890,000 | 209,000 | 16,072,000 | 7,654,000 | 7,155,000 | 4,173,000 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வாராந்த சந்தை வாடகை தாரர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 121,200 வாடகைத் தொகையினை 03 வருடங்களுக்கு மேலாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமான பரிசோதகரின் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான நடவடிக்கை முன்னெடுக்கப்படும். | வாடகை நிலுவைகளை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரை கேள்வி மீதான குத்தகை வழங்கலிருந்து பெறவேண்டிய தொகை ரூபா 6,881,628 ஆக இருந்தது. அதில் ரூபா 201,549 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவையாக இருந்தது. | 2021 ம் ஆண்டு நிலுவைதாரர்களுக்கு சட்டத்தரணியூடாக Letter of Demand அனுப்பப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஏனையவர்களுக்கும் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிலுவைகள் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆம் ஆண்டில் அலுவலக கட்டிடம் நிர்மாணிப்பதற்காக உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 18,291,467 கடன் தொகைகள் மற்றும் செலுத்த வேண்டிய வட்டி ரூபா 4,573,444 ஆகிய தொகைகளினை அந்நிதியத்திற்கு செலுத்தி தீர்ப்பதற்கு கணக்காய்வு திகதி வரைக்கும் | சபையின் வருமானம் மிக குறைவாகக் காணப்படுவதனால் குறித்த கடன் கொடுத்து தீர்கப்படாது உள்ளது குறித்த கடன் செலுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் மற்றும் வட்டியினை செலுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | சேதன பசளை உற்பத்தியினை மேம்படுத்தும் நோக்கில் 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,500,000 பெறுமதியான இயந்திரம் மற்றும் அதனை நிறுவவதற்காக ரூபா 803,520 செலவில் அமைக்கப்பட்ட தளம் போன்றவற்றிக்கான உட்கட்டுமான பணிகள் நிறைவடையாமையினால் சேதன பசளை உற்பத்தி செயற்பாடு 03 வருடங்களுக்கு மேலாக ஆரம்பிக்கப்படாமல் விளைவற்றதாக காணப்பட்டிருந்தது. | சேதனப்பசளை தயாரிப்பதற்கான உட்கட்டுமான பணிகள் நிறைவடையாததன் காரணமாகவே அவ்வியந்திரத்தினை பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. | சொத்துக்களை பயன்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 06 வாகனங்களினை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது அவற்றினை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு 03 வருடங்களுக்கு மேலாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தங்களால் குறிக்கப்பட்ட 06 வாகனங்களும் 2024ம் ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்டு மீள பயன்படுத்தவோ அல்லது ஏலத்தில் விடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதன முகாமைத்துவ சுற்றறிருப இல: 05/2020 ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் பயன்படுத்தப் பட்டு வரும் 06 வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்கு கணக்காய்வுத் திகதி வரைக்கும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வாகனங்களை உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் உரிமை மாற்றம் செய்யப்படும். | வாகனங்களை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்படல் வேண்டும். |

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| 2013/2014 காலப்பகுதியில் பயன்படுத்தப் பட்ட 09 பற்றுச்சீட்டு புத்தகங்கள் மற்றும் அச்சீட்டுகள் மூலம் அறவிடப்பட்ட பணத் தொகைகள் சபைக்கு ஒப்படைக்கப் படாமையினால் சபையின் உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளினை உரிய காலப்பகுதியில் மேற்கொண்டு ஏற்பட்ட இழப்பினை அவ்உத்தியோகத்தரிடமிருந்து அறவீடு செய்வதற்கு 10 வருடங்களுக்கு மேலாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பற்றுச்சீட்டுப் புத்தகத்தை பயன்படுத்திய உத்தியோகத்தருக்கு எதிராக ஆரம்ப விசாரணை நடாத்தப்பட்டுள்ளது | ஒழுக்காற்று நடவடிக்கைகளினை உரிய காலப்பகுதியில் எடுக்கப்படல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| 1971 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை இனங்கண்டு அவற்றினை பௌதீக ரீதியாக அடைந்து கொள்ளக் கூடியவாறு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவை தொடர்பிலும் அதிக கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளகள் அடைவதற்கான திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |